முருகப்பெருமான் துணை

**மகான் அரிவாட்டாய நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.09.2023**, புதன்கிழமை

1. கருணை நிறைந்த குருராஜனே
   கலியிடர் வெல்லும் வண்ணம்
   ஆறுமுகனார் அவதாரம் கண்ட
   அரங்கமகா ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   ஆசிதனை சோபகிருது தரிவை திங்கள்
   அய்யமற சூலதிகதி கணக்கன் வாரம்
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 03 ம் நாள், 20.09.2023, புதன்கிழமை)
3. வாரமதில் அரிவாட்டாய நாயனாரும்
   வழங்குவேன் உலக நலம் பெற
   சோரமில்லா நல்லுலகமாக
   சுத்த சைவ நெறிமுறை காட்டும்
4. காட்டும் அரங்கன் வழிமுறைகளை
   கட்டளையாக ஏற்று மக்கள்
   வாட்டமறத் தொடர்ந்து வர
   வணங்கித் திருவடி விட்டகலா
5. அகலா அரங்கன் நாமசெபம்
   அளவிலா செய்து கொண்டு
   வகைபட நிலைகள் உயர
   வரமாகும் தீட்சை ஏற்றும்
6. ஏற்றுமே ஆற்றல் கூட்டியே
   எல்லாமே குருவருட் செயலென
   ஆற்றலும் நல்லமாற்றமும் தாயென
   அனுதினமும் வேண்டித் தொடர

7. தொடரவே தீவினை அகலும்
தொடரவே தேகபிணி அகலும்
தொடரவே அறிவுத் தெளிவு
தெளிவுடன் ஞானபலமும் கிட்டும்
8. கிட்டவே பிறவிப் பயனாக
கேட்காமலே பலவெற்றிகளும்
தட்டாது ஞானிகள் ஆசியும்
தன தேட்டு நற்பேரு என
9. என பலவகை வரம் கூடி
இப்பிறவி நாம் செய்யும்
தான தரும வழி வகையும்
தடையற அரங்கேறி மாற்றம்
10. மாற்றம் அரங்கன் ஆசிபட
மக்கள் தானும் விருப்பம்மேல்
ஆற்றலும் ஆயுள் பலமுடன்
அழிவிலா இனி பிறவி காணா
11. பிறவிகாணா பெரும்பேறு
பேராசான் துணைபட கண்டு
துறவுக்கு ஒப்ப இல்லறஞானியாக
தேற்றம் கண்டு சிறப்பர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—